# தூய மரியன்னை
# தொழிற்பயிற்சி நிலையம்
## காந்தி நகர்
## கும்பகோணம் - 612 001

தூய மரியன்னை தொழிற் பயிற்சி நிலையம், குடந்தை மறைமாவட்ட கிறிஸ்துவ சிறுபான்மையினரால் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இந்நிறுவனம் மிஷோத் அடிகளார், குடந்தை ஆயர் அகஸ்டின் சாப்புயி அவர்களின் பெருமுயற்சியால் 08-12-1914 அன்று 20 மாணவர்களைக்கொண்டு மாநில அரசு அங்கீகாரத்துடன் தச்சு பிரிவு தொடங்கப்பட்டது.

இத் தொழிற்பயிற்சி நிலையம், குடந்தை மறைமாவட்டத்தைச் சுற்றியுள்ள ஏழை, எளிய மாணவர்கள் தொழிற்கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறியுள்ளனர் என்பதிலே பெருமை கொள்கின்றது.

மேலும் இந்நிறுவனம் குடந்தை ஆயர்கள் மற்றும் தாளாளர்களின் விடாமுயற்சியாலும், சிறப்பான பணியாலும் படிப்படியாக வளர்ந்து இன்று மத்திய மாநில அரசுகளின் நிரந்தர அங்கீகாரத்துடன் 6 தொழிற்பிரிவுகளை மிகச்சிறப்பாக, மாநிலத்திலேயே சிறந்த தொழிற்பயிற்சி நிலையமாக கடந்த 103 வருடங்களாக செயல்பட்டுவருகிறது என்பதில் பெருமைகொள்கிறது.

இந்நிலையம் அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், இந்நிலைய மாணவர்களுக்கு **பஸ் பாஸ்** பெறுவதற்கு வசதி உண்டு.

தொலை தூரத்தில் படிக்கும் மாணவர்களுக்கு வசதியாக இந்நிறுவனத்தில் தங்கி படிக்க **மாணவர் விடுதி** ஒன்றும் சிறப்புடன் செயல்பட்டுவருகிறது.

இந்நிலையம் **"நிறை வாழ்வு"** என்ற குறிக்கோளை நோக்கி செயல்படுவதால், மாணவர்களின் படிப்பும், ஒழுக்கமும் இரு கண்களாக கருதி நிர்வாகம் செயல்படுகிறது.

## தொழிற்பிரிவுகள்

| வ.எண் | தொழிற்பிரிவு | பயிற்சி காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | Electrician | 2 Years | 10 Std Pass |
| 2. | Fitter | 2 Years | 10 Std Pass |
| 3. | Mechanic( Motor Vehicle) | 2 Years | 10 Std Pass |
| 4. | Mechanic (Diesel) | 1 Year | 10 Std Pass |
| 5. | Wireman | 2 Years | 8 Std Pass |
| 6. | Welder | 1 Year | 8 Std Pass |

**விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பங்கள் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன. எந்தெந்த பிரிவுகளில் மாணவர் சேர விருப்பமோ அந்தந்த பிரிவிற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட தேதிக்குள் சமர்பிக்க வேண்டும். அனைத்து பிரிவுகளுக்கும் ஆண், பெண் இருபாலரும் சேர்க்கப்படுகிறார்கள். வயது வரம்பு 14 முதல் 40 வயது வரை.

விண்ணப்பங்கள் மே மாதம் முதல் தேதியிலிருந்து வழங்கப்படுகிறது.

விண்ணப்பத்தின் விலை 100 ரூ.




மேலும் விபரங்களுக்கு

**தாளாளர் / முதல்வர்**

தூய மரியன்னை தொழிற்பயிற்சி நிலையம்

காந்தி நகர், கும்பகோணம் - 612 001

தொலைபேசி எண் :0435 - 2430193

E-Mail : stmarysiti@gmail.com

Website : www.stmarysiti.in